மாண்புமிகு முதல் அமைச்சர் கலைஞர் :– மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு அடித்தட்டு மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவருடைய தலையெழுத்தையும் நிர்ணயிக்கக் கூடிய ஒரு நிலையை இன்றைக்கு நாம் காணுகிறோம். அப்படி நிர்ணயிக்கின்ற அந்த நிலை அவர்களைத் தலை தூக்க விடுகின்ற நிலையாக இருப்பதா அல்லது தலை தாழ வைக்கின்ற நிலையாக ஆவதா என்ற இந்த வினாக்களுக்கு விடையளிக்க வேண்டிய சூழ்நிலை நமக்கு ஏற்பட்டிருக்கின்றது.

இட ஒதுக்கீடு என்பது இங்கே உரையாற்றிய பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் எடுத்துக் கூறியதைப் போல தமிழ்நாட்டிலே தான் அதற்கு விளை நிலம் – நாற்றங்கால் – தமிழ்நாட்டிலே விதை ஊன்றப்பட்டு, தந்தை பெரியார் அவர்களால், பேரறிஞர் அண்ணா அவர்களால், பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் பாதுகாக்கப்பட்டு, நம்முடைய எதிர்காலச் சந்ததி வாழ, வளம் பெற, நாடு வலிவுபெற, சமுதாயம் ஊக்கம் பெற எத்தகைய முன்னேற்றங்களை – கல்வித் துறையிலும் வேறு பல துறைகளிலும் நாம் பெற வேண்டுமென்று கருதுகிறோமோ அதற்கெல்லாம் இடையூறாக இருக்கின்ற தடைகளை நீக்க வேண்டும் என்பதற்காகத் தான் இட ஒதுக்கீடு கேட்கிறோம்.

தடையைக் கடந்து செல்வது என்பது வேறு – ஒதுங்கிச் செல்வது என்பது வேறு. நாம் கேட்பது கடந்து செல்வது கூட அல்ல, ஒதுங்கிச் செல்வது – அதனால் தான் ஒதுக்கீடு என்று குறிப்பிடுகிறோம். இந்த ஒதுங்கிச் செல்கின்ற உரிமை கூட நமக்குக் கிடையாது என்று மறுக்கப்படுகிறது. அதற்கு, அந்த மறுப்புக்கு உச்ச நீதி மன்றம் வரையிலே முத்திரை குத்தப்படுகிறது என்றால் – 100 கோடி மக்களுடைய ஜாதகத்தை, அவர்களுடைய எதிர்காலத்தை இரண்டு பேர், மூன்று பேர் நிர்ணயித்து விட முடியும் என்ற ஒரு சூழ்நிலை நாட்டிலே இருப்பது ஜனநாயகத்திற்குக் கேடு, தீங்கு, பெரும் தீமை என்பதை (மேசையை தட்டும் ஒலி) உலகத்திற்கு நாம் அறிவித்தாக வேண்டும். அத்தகைய உணர்ச்சி மயமான ஒரு கட்டத்திலே தான் நாம் இந்த அவையிலே சில கருத்துக்களை எடுத்து பரிமாறிக் கொண்டிருக்கிறோம்.

குறிப்பாக அ.தி.மு.க. சார்பிலே உரையாற்றிய ஜெயக்குமார் அவர்களும், காங்கிரஸ் கட்சி சார்பிலே உரையாற்றிய பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் உரையாற்றிய வேல்முருகன் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் உரையாற்றிய கோவிந்தசாமி அவர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் உரையாற்றிய சிவபுண்ணியம் அவர்களும், ம.தி.மு.க. சார்பில் உரையாற்றிய வீர. இளவரசன் அவர்களும், விடுதலை சிறுத்தைகள் சார்பில் உரையாற்றிய ரவிக்குமார் அவர்களும் ஒரே கருத்தைத் தான் பல பாணிகளிலே சொன்னாலுங்கூட, எடுத்துக் கூறியிருக்கிறோம்.

அது தான் இட ஒதுக்கீடு காப்பாற்றப்பட வேண்டும் என்பதாகும். இது தோன்றிய காலத்திலிருந்து – நீதிக் கட்சிக் காலத்திலே தமிழகத்திலே தோன்றிய நேரத்திலேயிருந்து பல்வேறு எதிர்ப்புக்களை, இன்னல்களை, இடையூறுகளை யெல்லாம் இந்தக் கொள்கை சந்தித்திருக்கின்றது. இதற்காக தந்தை பெரியார் அவர்கள் எத்தகைய தியாகங்களைச் செய்தார், எந்த அளவிற்கு அவர் இதற்காகப் போராடினார் என்பதெல்லாம் பழைய வரலாறு. இன்றைக்கும் நம் நினைவிலே இருக்கின்ற வரலாறு. இதை அறிமுகப்படுத்திய போது நீதிக் கட்சிக் காலத்திலே அறிமுகப்படுத்திய போது, இதற்கு வகுப்புவாரி பிரதிநிதித் துவம் என்கிற பெயர் சூட்டப்பட்டு, அந்த வகுப்புவாரியாக மக்களுக்கு உரிமை கள் அளிக்கப்பட வேண்டும் என்று அழுத்தந்திருத்தமாக கூறப்பட்டு, அதன் காரணமாகவே தந்தை பெரியார் அவர்கள் பேரியக்கமான காங்கிரசிலே யிருந்து விலக நேரிட்டது என்பதையும் யாரும் மறந்து விடுவதற்கில்லை. ஆனால் அன்றைக்கு பெரியாருடைய அந்தப் பெரும் போராட்டத்தின் விளைவாக பெருந் தலைவர் காமராஜர் அவர்கள் டெல்லியிலே அவர் கொண்டிருந்த தொடர்பின் காரணமாக பண்டித நேரு அவர்களிடம் எடுத்துரைத்து அரசியல் சட்டத்திலேயே முதல் திருத்தம், பெருமைக்குரிய திருத்தம் இந்த இட ஒதுக்கீட்டிற்காகத் தான் பெருந்தலைவர் காமராஜரால் கொண்டு வரப்பட்டது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நன்றியுள்ள "சூத்திரர்கள்" யாரும் மறந்து விட முடியாது. நான் ஏன் இதை அழுத்தந்திருத்தமாக கூறுகிறேன் என்றால், "சூத்திரர்களாக" ஆக்கப் பட்டவர்கள், நாலாந்தர மக்களாக ஆக்கப்பட்டவர்கள், தங்களுடைய எழுச்சிக்

காக – தங்களுடைய உரிமைகளை நிலைநாட்டுவதற்காக – தலை நிமிர்ந்தாலே தலையைத் தட்டுகின்ற காரியம், எங்கிருந்தும் நடைபெறுகிறது. நாமே சில நேரங்களில் அந்தக் குழப்பத்திற்கு ஆளாகிறோம். இடைக்காலத்தில் நண்பர் ஜெயக்குமார், நண்பர் பன்னீர்செல்வம் ஆகியோரெல்லாம் வருத்தப்படக் கூடாது – நாமே இந்த இட ஒதுக்கீடு கல்வியில் வேலை வாய்ப்புகளில் நமக்குக் கிடைப்பது சமுதாய ரீதியிலே சரியானதா – பொருளாதார ரீதியிலே சரியானதா என்ற ஒரு வாக்குவாதம் ஏற்பட்டு, பொருளாதார அடிப்படையிலே தான் இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டு, 9000 ரூபாய் என்று உச்சவரம்பு நிர்ணயிக்கப் பட்டு, அந்த 9000 ரூபாய் என்று உச்ச வரம்பு வந்தால், ஒழிந்தது இந்தச் சமுதாயம் என்று திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி போன்ற கட்சிகள் இன்னும் சொல்லப் போனால் காங்கிரசிலே உள்ள இட ஒதுக்கீட்டு ஆதரவாளர்கள் எல்லாம் கூட ஒன்று சேர்ந்து அன்றைக்குப் போராடி னோம். அந்தப் போராட்டத்தின் காரணமாகத் தான் 9000 ரூபாய் என்ற அந்தப் பொருளாதார அடிப்படை மாற்றப்பட்டு, அன்றைக்கு அருமை நண்பர் எம்.ஜி.ஆர். தான் அதைக் கொண்டுவந்தார், அவரே அந்தப் போராட்டத்தைக் கண்டு தன்னைத் திருத்திக் கொண்டு இட ஒதுக்கீட்டிற்குள்ள பெருமையை, வகுப்பு வாரிப் பிரதி நிதித்துவத்திற்கு உள்ள பெருமையை, அதற்குள்ள மகிமையை அவரே அன்றைக்கு உணர்ந்து அதற்கு வழி வகுத்துக் கொடுத்தார் என்பது வரலாறு.

எனவே நாம் நம்முடைய உடம்பைக் கிள்ளிப் பார்த்துக் கொண்டால் கூட வருகின்ற ஒரு துளி ரத்தம் கூட வகுப்புவாரி பிரதிநிதித்துவம், இட ஒதுக்கீடு என்ற பெரியாருடைய இந்தக் கொள்கைகளை பிரதிபஃ லிக்கக் கூடியது தான் என்பதை மறந்து விடாத காரணத்தினால் தான் இன்றைக்கு நாம் துடித்துப் போகிறோம்.

நேற்றையதினம் இந்தச் செய்தி வந்தவுடன் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் என்னிடம் உடனடியாக தொலைபேசியிலே தொடர்பு கொண்டு இதற்கு என்ன செய்வது என்று கேட்டு – நாம் ஒரு புதிய போராட்டத் தை ஆரம்பிக்க வேண்டும், ஆதரவு கொடுங்கள் என்று கேட்டார்கள்.

எல்லோரும் சேர்ந்து அதனை ஆரம்பிப்போம், நீங்கள் ஆரம்பித்து நான் ஆதரவு கொடுப்பது பிறகு இருக்கட்டும், எல்லோரும் சேர்ந்தே ஆரம்பிப்போம், அதற்கான காலம் வரும் என்றே கருதுகிறேன் என்று நான் அவருக்குச் சொன்னேன். உடனடியாக நான் டெல்லியிலே உள்ள பிரதமருக்கு, திருமதி சோனியா காந்தி அவர்களுக்கும், அமைச்சர்கள் அர்ஜுன் சிங் அவர்களுக்கு, பரத்வாஜ் அவர் களுக்கு கடிதம் எழுதியிருக்கின்றேன். அந்தக் கடிதத்திலே நான் குறிப்பிட்ட வாசகங்கள் தான் நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் மருத்துவர் அய்யா ராமதாஸ் அவர்கள் எழுதிய அந்த அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டிருக் கிறது. நான் குறிப்பிட்டிருப்பது – தற்போது உச்ச நீதிமன்றம், தடையாணையை ரத்து செய்ய வேண்டும் என்ற மத்திய அரசின் கோரிக்கையை நிராகரித்து விட்ட நிலையில் நமக்குள்ள ஒரே வழி நாடாளுமன்றத்தின் இரு அவைகளையும் உடனடியாகக் கூட்டி இது குறித்து விவாதித்து உரிய விரைவான முடிவெடுத்து உயர் கல்வி நிறுவனங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டுக் கொள்கையில் எந்தவிதப் பின்னடைவும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்'' என்று நான் எழுதியதைப் போலவே தான் டாக்டர் அவர்களும் இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக இரு அவைகளையும் கூட்டி உடனடியாக ஒரு முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஆகவே நாடு முழுதும் இருக்கின்ற நலிந்தோர், நாடு முழுதும் இருக்கின்ற அடக்கப்பட்டோர், நாடு முழுதும் இருக்கின்ற ஒடுக்கப்பட்டோர், நாடு முழுதும் இருக்கின்ற நாலாம் சாதி, ஐந்தாம் சாதி என்று தள்ளப்பட்டோர் எழுகின்ற காலம் எரிமலை பொங்குகின்ற காலமாக ஆகி விடும், அதற்கு இடம் தராமல் மத்திய சர்க்கார் இப்போதே ஒரு உரிய வழியைக் காண வேண்டும் என்று இந்த அவையின் மூலமாக தீர்மானமாக அல்ல – தீர்மானம் தேவையில்லை – இங்கே நாம் உதிர்த்திருக்கின்ற "தீப்பொறி வார்த்தை"களே போதும் என்று கூறி அமை கின்றேன்.